**செய்தி வெளியீட்டு எண்.955** **நாள்: 09.12.2009**

செய்திக் குறிப்பு

**உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு தொடர்பாக ஆலோசனைக் குழு அமைக்கப்படுகிறது.**

**கோவை மாநகரில் 2010–ஆம் ஆண்டு ஜுன் மாதம் 23 ஆம் நாள் முதல் 27 ஆம் நாள் வரை நடைபெறவுள்ள உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினை மிகச் சிறப்பாகவும் சீரிய முறையிலும் நடத்துவதற்குத் தமிழக அரசு ஆணையிட்டுள்ளது. இம்மாநாட்டிற்கான பல்வேறு ஆயத்தப் பணிகளை மேற்கொள்வதற்காக ஏற்கனவே மாநாட்டுத் தலைமைக் குழு, ஆய்வரங்க அமைப்புக் குழு, சிறப்பு மலர்க் குழு, தமிழ் இணைய மாநாட்டுக் குழு மற்றும் மாநாட்டு ஒருங்கிணைப்புக் குழு ஆகிய குழுக்களை அமைத்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இக்குழுக்கள் தங்களுடைய பணிகளைத் தொடங்கி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.**

**2. இம்மாநாட்டினை வெற்றிகரமாக நடத்துவதற்காக பல்வேறு அரசியல் கட்சிகளின் ஆலோசனைகளைப் பெறும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தமிழகச் சட்டமன்றக் கட்சித் தலைவர்களிடம், ஒத்துழைப்புத் தருமாறு கோரி கடிதம் அனுப்பினார்கள். அதன் அடிப்படையில் பதில் தெரிவித்துள்ள சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் மற்றும் பிற அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அடங்கிய ஆலோசனைக் குழுவை அமைத்து தற்போது அறிவித்துள்ளார்கள். அக்குழுவின் விவரம் பின்வருமாறு.**

<u>தலைவர்</u>

கலைஞர் மு. கருணாநிதி
மாண்புமிகு முதலமைச்சர்

<u>உறுப்பினர்கள்</u>

பேராசிரியர் க. அன்பழகன்
மாண்புமிகு நிதியமைச்சர்

திரு. ஆவுடையப்பன்,
மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர்

திரு.கே.வீ. தங்கபாலு
இந்திய தேசிய காங்கிரஸ்

திரு.கி. வீரமணி
திராவிடர் கழகம்

திரு. இராம வீரப்பன்
எம்.ஜி.ஆர் கழகம்

திரு.கோ.க. மணி
பாட்டாளி மக்கள் கட்சி

திரு.என். வரதராஜன்,
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி

திரு.வை. சிவபுண்ணியம்
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

திரு.இல. கணேசன்
பாரதிய ஜனதா கட்சி

திரு. காதர் மொய்தீன்,
இந்திய யூனியன் முஸ்லீம் லீக்

திரு. தொல் திருமாவளவன்
விடுதலைச் சிறுத்தைகள் கட்சி

திரு. ஸ்ரீதர் வாண்டையார்
மூவேந்தர் முன்னேற்றக் கழகம்

திரு.பூவை ஜெகன் மூர்த்தி
புரட்சி பாரதம்

திரு.பெஸ்ட் ராமசாமி,
கொங்கு முன்னேற்றக் கழகம்

திரு.கே.எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப.,
தலைமைச் செயலர்

அமைப்பாளர்

திரு. கா. அலாவுதீன், இ.ஆ.ப.
தனி அலுவலர், உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு

**3.** மைய அரசு தமிழ் மொழியின் சிறப்பினையும், தொன்மையையும் போற்றும் வகையில் அதனைச் செம்மொழியாக அறிவித்த பிறகு நடைபெறுகின்ற உலக அளவிலான முதல் மாநாடு என்பதால், இதனை மிகச் சிறப்பாகவும், சீரிய முறையிலும், செம்மொழித் தமிழுக்கு மேலும் சிறப்புச் சேர்க்கின்ற வகையிலும் நடத்த வேண்டும் என்பதற்காக இந்த ஆலோசனைக் குழுவின் மூலம் பல்வேறு அரசியல் கட்சிகளின் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் பெற்று தக்க மேல் நடவடிக்கை எடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

*******************

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.